# வாக்குமூலம்
# நீதிமன்றம் இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, இராணிப்பேட்டை.
# வழக்கு எண். SC 69/2020
# வழக்கு சாட்சி PW 10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜனார்தனன் | ஜாதி | : | MBC |
| தந்தை பெயர் | : | நடராஜன் | தொழில் | : | Doctor |
| கிராமம் | : | இனாம் காரியந்தல் | சமயம் | : | Hindu |
| தாலுக்கா | : | திருவண்ணாமலை மாவட்டம் | வயது | : | 40 |

**(எதிரி ஆஜர்)**

**தேதி 04.01.2024**

**முதல் விசாரணை**

நான் தற்போது தருமபுரி மாவட்டம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பொது அறுவை சிகிச்சை மேற்படிப்பு படித்து வருகிறேன். கடந்த 18.09.2019 ம் தேதி வாலாஜா அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியில் இருந்தபோது இராணிப்பேட்டை காவல் நிலைய கு.எண். 576/2019 வழக்கில் பிரேதமான தனலட்சுமி க/பெ. செல்வம் என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்கு முதல் நிலை காவலர் பிரேமா என்பவர் அடையாளம் காட்டிய பிரேதத்தை அன்றைய தினம் மாலை 5.00 மணிக்கு பிரேத பரிசோதனை செய்ய துவங்கினேன். மெலிந்த பெண் பிரேதம் மல்லாந்த நிலையில் கண்கள் பாதியளவில் மூடிய நிலையிலும், வாயில் நுரையுடனும், சிறிது நாக்கு துறுத்திய நிலையில் காணப்பட்டது. 2 காதுகளின் இடையில் (Ligature Mark) கழுத்து பகுதியில் 32 x 7 செமீ அளவில் காணப்பட்டது. இடது காதிற்கு பின்புறம் (Ligature Mark knot) முடிச்சு அடையாளம் காணப்பட்டது. முகம் வாடிய நிலையில் காணப்பட்டது. கைகள், அதன் நகங்கள் மற்றும் கால்கள் நீலம் பூத்து காணப்பட்டன. வயிற்று பகுதியை கூராய்வு செய்ததில் கருப்பையில் வீக்க நிலையில் இருந்ததால் அதை திறந்த பார்த்தபோது சுமார் 14 முதல் 16 வாரங்களான ஆண் சிசு காணப்பட்டது. கழுத்து பகுதியை கூராய்வு செய்ததில் நாவடி எலும்பு நல்ல நிலையில் இருந்தது. வயிற்றில் உணவுப்பொருட்கள்

காணப்படவில்லை. மார்புக்கூடு நல்ல நிலையில் இருந்தது. நுரையீரலில் சலிப்படலம் போன்ற திரவம் காணப்பட்டன. வலது மற்றும் இடது நுரையீரல்கள் சிறிதளவு ரத்தம் தோய்ந்த நிலையில் காணப்படடது. கல்லீரலில் சிறிது ரத்தம் தோய்ந்து காணப்பட்டது. மூளை இயல்பான நிலையில் இருந்தது. மேற்படி நபரின் பிணத்தில் இருந்து எடுக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளான கல்லீரல், சிறுநீரகங்கள், வயிறு பகுதி மற்றும் குடல், நாவடி எலும்பு ஆகியவற்றை இரசாயண பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இராசாயண பரிசோதனையில் எந்தவிதமான நச்சுப்பொருட்கள் எதுவும் கண்டறியப்படவில்லை. நாவடி எலும்பு இயல்பாக இருந்தது என்று அறிக்கை பெறப்பட்டது. மேற்படி இறந்த நபரான தனலட்சுமி மூச்சு திணறல் காரணமாக பிரேத பரிசோதனை செய்வதற்கு 12 முதல் 18 மணி நேரத்திற்கு முன்பாக இறந்திருக்கலாம் என்று கருத்துரை வழங்கினேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் கருத்துரை **அ.சா.ஆ.8** ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்துபோன நபர் மெலிந்த உடல் உருவம் கொண்டவர். அந்த நபர் தற்கொலைக்கு முயன்ற போது மூச்சு திணறல் ஏற்பட்டு இறப்பதற்கு வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH

**வாக்குமூலம்**
**நீதிமன்றம் இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, இராணிப்பேட்டை.**
**வழக்கு எண். SC 69/2020**
**வழக்கு சாட்சி PW 11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரேமா | ஜாதி | : | வன்னியர் |
| கணவர் பெயர் | : | சதாசிவம் | தொழில் | : | காவல் துறை |
| கிராமம் | : | அம்முண்டி | சமயம் | : | இந்து |
| தாலுக்கா | : | காட்பாடி | வயது | : | 37 |

**(எதிரி ஆஜர்)**
**தேதி 04.01.2024**
**முதல் விசாரணை**

நான் தற்போது இராணிப்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பெண் முதுநிலை காவலராக பணிபுரிகிறேன். கடந்த 18.09.2019 ம் தேதி இராணிப்பேட்டை காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது இராணிப்பேட்டை காவல் நிலைய கு எண். 576/2019 பிரிவு 174(3) குவிமுச வழக்கில் பிரேதமான தனலட்சுமி என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய காவல் ஆய்வாளர் உத்தரவுப்படி வாலாஜா அரசு மருத்துவமனைக்கு சென்று மருத்துவருக்கு பிரேதத்தை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனை செய்த பின்பு இறந்த நபரின் உறவினரிடம் பிரேதத்தை ஒப்படைத்தேன். பின்பு பிரேத பரிசோதனையின் போது சேகரிக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை 27.09.2019 ம் தேதி வேலூர் இரசாயண பரிசோதனை கூடத்தில் ஒப்படைத்தும் நாவடி எலும்பை வேலூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ஒப்படைத்தும் இது சம்மந்தமாக ஆய்வாளரிடம் அறிக்கை செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH